பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை

# Prof. S. Selvanayagam Memorial Lecture

# 9



2007

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

ARCHIVES

## New Trends in Sri Lankan Education, Since 1970 —Expectation and Fulfilment.

## 1970 க்கு பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள் — எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்.

பேராசிரியர் வ. ஆறுமுகம்
தலைவர், கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

*Professor:* **V. ARUMUGAM,**
Head, Dept of Education,
University of Jaffna.
Jaffna.

யூன்
June **1993**

N.A.

# அறிமுகம்

., யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் முதலாவது புவியியற் பேராசிரியர் அமரர், சோ. செல்வநாயகத்தின் 9வது நினைவுப் பேருரை இன்று நிறைவேறிக்கொண்டிருக்கின்றது. பேராசிரியர் சோ. செல்வநாயகம் எம்மவரின் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவர். உலகறிந்த புவியியற் பேராசிரியர். எமது பிரதேச அபிவிருத்தி பற்றிய தூரநோக்குக் கொண்டு பல்வேறு ஆராய்ச்சிகளை நடாத்தியவர். தற்காலத்தில் நாடுகளிடையே பிரபல்யம் பெற்று வருகின்ற நிலப்பயன்பாட்டு ஆய்வுகளை பல வருடங்களுக்கு முன்னரே எமது பிரதேசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னெடுத்த தன்மை அவருடைய பிரதேச அபிவிருத்தி பற்றிய தூரநோக்குக்கு சிறந்த உதாரணமாகும். நிலப்பயன்பாட்டு ஆய்வுகளோடு நின்று விடாமல், புவியியலின் பல்வேறு துறைகளிலும் தனது கவனத்தைச் செலுத்தி இருந்தார். குறிப்பாக மீன்பிடிப் புவியியல், கிராம--நகர புவியியல் என்பவை அவரது அகல, ஆழநோக்குப்பட்டிருந்த பிரிவுகளாகும். புவியியல் மட்டுமன்றி தமிழர் பிரதேசம், நாகரிகம், இலக்கியம், கல்வி, சமயம், பொருளாதாரம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் பற்றுறுதி கொண்ட துறைகளில் காலத்துக்குக்காலம் அவரை நினைவுகூர்ந்து இடம்பெறும் பேருரையின் தொடர் இன்று நடைபெறுகின்றது. இன்று நிகழும் 9வது பேருரையில் "1970க்குப் பின் இலங்கைக் கல்வியின் புதிய போக்குகள் – எதிர் பார்ப்பும் நிறைவேற்றமும்" என்னும் பொருளில் கல்வியற்றுறைத் தலைவர், பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள் வழங்குகின்றார்.

இதுவரை நிகழ்த்தப்பட்ட நினைவுப் பேருரைகள்:

| | தலைப்பு | உரையாற்றியோர் |
|---|---|---|
| 1. | "இலங்கையின் ஆதிக்குடிகள் – ஒரு தொல்லியல் நோக்கு" | கலாநிதி. சி. க. சிற்றம்பலம், தலைவர், வரலாற்றுத்துறை |
| 2. | "வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் குடித்தொகையும் நிலக்குடியேற்றமும் | பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை, தலைவர், புவியியற்றுறை |
| 3. | "இலங்கையின் வணிகக் கணங்கள்" | பேராசிரியர். சி. பத்மநாதன், வரலாற்றுத்துறை |
| 4. | "தென்னாசியக் கலைவடிவங்களில் நாட்டியமரபு" | பேராசிரியர். வி. சிவசாமி, தலைவர், சமஸ்கிருதத்துறை |

| | | |
|---|---|---|
| 5. | "அரசும் கருத்து நிலையும் அபிவிருத்தியும் லெங்கை - பற்றிய சில அவதானிப்புக்கள்" | பேராசிரியர். நா. பாலகிருஷ்ண கலைப்பீடாதிபதி |
| 6. | "சங்ககால நகரங்களின் அழிவும், கடல்கோள்களின் நிகழ்வும்" | திரு. செ. பாலச்சந்திரன், தலைவர்/சிரேஷ்ட விரிவுரை புவியியற்றுறை |
| 7. | "தமிழரின் பாரம்பரிய மருத்துவம்" | கலாநிதி. பால. சிவகடாட்சம் தலைவர், விவசாய உயிரியற் |
| 8. | "யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக்கொள்ளல் அதன் உருவாக்கம் செயலாக்கம்" | பேராசிரியர். கா. சிவத்தம்பி, தலைவர், நுண்கலைத்துறை. |

பா. இராஜேஸ்வரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை.
(9வது நினைவுப்பேருரை விழா அமைப்பாளர்)
23.06.1993.

செ. பாலச்சந்திரன்,
தலைவர்,
புவியியற்றுறை

## பேருரையாளர் பற்றி பேராசிரியர்

பேராசிரியர். வ. ஆறுமுகம் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு கொழும்பு நெறிக் கல்லூரியில் போற்றுதற்குரிய பணியினைச் செய்த இவர் 1968ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து பின்னர் கொழும்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராக, இணைப் பேராசிரியராக, பேராசிரியராக தம்மை உயர்த்திக் கொண்டவர். 1990ஆம் ஆண்டிலிருந்து இவர் பேராசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

தமிழில் சிறப்புக்கலை பயின்ற இவர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவில் சித்தியடைந்து சிறந்த தமிழறிவுடையோராகவும் குறிப்பாகத் தமிழ் பாடவிதானங்களைத் தயாரிப்பதில் சிறப்புத் தேர்ச்சியும் பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர் அமரர் வி. செல்வநாயகம் அவர்களின் மதிப்புக்குரிய மாணவன். இவரது தமிழ் கற்பித்தல் முறையானது பேராசிரியரின் பண்புகள் தொனிப்பதைக் காண முடிகின்றது. ஒப்புவமைக் கல்வியில் விசேட புலமை கொண்ட இவர் பல்வேறு நாடுகளில் காணப்படும் கல்வி முறைகளின் குறைநிறைகளை நன்கறிந்தவர். நாட்டின் கல்வியின் வெற்றியானது வகுப்பறையில் ஆசிரியருடைய கற்பித்தலிலேயே கூடுதலளவு தங்கியுள்ளது எனக் கொண்டு அதனை வலியுறுத்துவதில் முன் நிற்பவர்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வித்துறையை நன்முறையில் வழிநடத்தி வருவதுடன் எமது பிரதேச மாணவர்களின் பட்டப்பின்படிப்புக்களை வளர்த்துவருகின்றார்.

இவரது கல்வியாற்றலைக் கருத்திற்கொண்டு இலங்கை ஜனாதிபதி விருதினை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவரது வழிகாட்டலில் எமது பிரதேச மாணவர்கள் மேன்மேலும் முன்னேறுவார்கள் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கை.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி

## பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப்பேருரை

## 1993

## 1970க்குப் பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள் – எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்

பேராசிரியர் வ. ஆறுமுகம்,
தலைவர், கல்வித்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

1970க்குப் பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள் என்ற நோக்கு அந்த ஆண்டுதொட்டு எமது நாட்டுக் கல்வியில் புதிதாக உருப்பெற்ற/உருவாக்கப்பட்ட நடைமுறைகளை இனங்காண்பதையும் எடை போடுவதையும் இலக்கில் கொண்டதாகும். இக்காலப் பரப்பினையும் இதன் போக்கினையும் ஆராய முற்படும்போது நாட்டின் வரலாறு, முக்கியமாக அரசியல் வரலாறு, கவனத்திற் கொள்ளப்படுவதும் அவசியமாகும். ஒரு நாட்டின் அரசியற் கோட்பாடுகள் இலட்சியங்கள் என்பன அதன் கல்விச் செயற்பாட்டிலும் காலூன்றும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவமாகும். எமது நாட்டிலும், குறிப்பாக எமது கவனத்திலுள்ள இக் காலப்பகுதியில், இவ்வுண்மை தெளிவாகின்றது. 1970 இல் அரசாட்சிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியும், 1977 இல் அதனைத் தோற்கடித்துப் பதவியைப் பிடித்துக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியும் அரசியற் கொள்கையில் இரு துருவங்கள் போன்றவை. அப் பேதம் கல்விக் கொள்கையில் பிரதிபலித்ததா என்பதையும், அந்தந்தக் காலகட்டங்களில் அவர்கள் சந்திக்கவேண்டியிருந்த நிலைமைகள் அவற்றுக்கான துலங்கல்கள் எப்படியிருந்தன என்பதையும் பார்ப்பது விமர்சன நோக்கில் சிந்தையைத் தூண்டுவதாகும். கருத்திலேற்பட்ட எதிர்பார்ப்பு, அடைவில் காணப்பட்ட நிறைவேற்றம் என்பன கற்றோரிடத்துக் கவனத்தை உண்டுபண்ணுவன என்ற எண்ணத்திலேயே இவ்வுரை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை நினைவில் நிறுத்திக்கொள்வது தேவைப்படுவதாகும்.

காலத்தின் தேவை

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1970 ஆம் ஆண்டினை ஓர் எல்லைக்கோடாகக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். நானூற்று ஐம்பது ஆண்டுக்கால அந்நியர் ஆட்சிக்குப்பின் 1948 இல் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. நாட்டுக்குக் கிடைத்த அரசியற் சுதந்திரம், எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டதுபோல, மக்கள் வாழ்வின் ஏனைய துறைகளில் பிரதிபலிக்கவில்லை. சமுக-பொருளாதார வாழ்வு குடியேற்ற நாட்டுச் சாயலைக் கொண்டதாகவே காணப்பட்டது. கல்வியிலும் அந் தன்மையே மேலோங்கி நின்றது.

சுதந்திரத்தின் பின், குடியேற்றநாட்டுப் பாணியிலான கல்வி அமைப்பினை நாட்டுக்குகந்த தேசியக் கல்வி அமைப்பாக மாற்றும் நெறியில் மூன்று கட்டாய தேவைகள் முன்னெழுந்தன:-

1. நாட்டில் இடம்பெற்றிருந்த குடியேற்ற நாட்டுக் கலாசாரத்தினை மறுத்து கல்விக்கூடாகத் தேசியக் கலாசாரத்துக்குப் புத்துயிர் கொடுக்கும் தேவை.

2. ஒரு பன்மைச் சமூகத்தில் தேசிய ஒருமைப்பாட்டின்/ ஒன்றிணைப்பின் முக்கியத்துவம்.

3. பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையும் ஒரு சமூகத்தில் கல்வியின் பொருத்தப்பாட்டு நோக்கின் மீள்பார்வை - குறிப்பாக அபிவிருத்தித் தேவைகளுக்கு ஈடுசெய்யும் வகையில் தொழிலாளர் சக்தியினை வளப்படுத்துதல்.

ஆனால், அவை நடைமுறை அடிப்படையிற் கவனத்திற்குள்ளாக நீண்ட காலம் எடுத்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கல்வி அரசுக்கு வேண்டிய ஆளணியை உருவாக்குவதையே இலக்காகக் கொண்டிருந்தது.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத்துக்குப் பொருந்தக் கூடிய, அவர்களது ஆட்சியை இலங்கையிற் தாங்கிப் பிடிக்கக்கூடிய,- ஓர் ஊழிய சேவையை, "நிறத்தாலும் பிறப்பாலும் இலங்கையராகவும் சிந்தனையாலும் செயலாலும் ஆங்கிலேயராகவும்" தொழிற்படும் சேவையை, உருவாக்கும் வகையிற் கல்வி திட்டமிடப்பட்டது. -அதன் வாயிலாகக் கிடைத்த சொகுசான அரச உத்தியோக வாழ்வு முழுச் சமுதாயத்தையுமே அதன் வலைக்குள் அகப்படுத்தியிருந்தது.

இம்மரபில், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்க மறந்த/மறுத்த, உடை நலுங்கா உத்தியோக மாயையில் மூழ்கி அதற்காக அரச உத்தியோகத்தை நாடித் தவங்கிடந்த, ஒரு வாலிப சமுதாயம் உருப்பெற்றது. சுதந்திரம் பெற்றபின்பும் இப் போக்கில் காத்திரமான மாற்றம் ஏதும் ஏற்படவில்லை/ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு வேண்டிய வகையில் கல்வியை முழுப்பார்வையில் நோக்க அன்றைய தலைமை தவறியதன் விளைவாகச் சுதந்திரம் பெற்றும் பிரச்சினைகளைப் பெருக்கிய நிலையே வளர்ந்தது.

காலத்துக்குக் காலம் தோன்றிய பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் முயற்சிகளாகச் சில சீர்திருத்தங்கள் கல்வியிலும் மேற் கொள்ளப்பட்டன. தொகை ரீதியாக, பள்ளிக்கூடங்கள், மாணவர்கள் மட்டத்தில் பெருக்கம் ஏற்பட்டது உண்மை. இப் பெருக்கத்தின் பின்னணியில், கல்வி வசதிகளையும் வாய்ப்புக்களையும் பரவலாக்கிய, இலவசக்கல்வி, தாய்மொழிக் கல்வி, மத்திய மகா வித்தியாலயங்களின் விருத்தி, போன்ற செயற்பாடுகளைக் காணலாம். இவ் வளர்ச்சியின் தொடர்பேறாக 1961 இல் பள்ளிக்கூடங்களின் முகாமைத்துவம் அரசின் கைக்கு மாறும் நிலை ஏற்பட்டது. இவை எல்லாம் இருந்தும், கல்வி மக்களுக்குப் பயன்தருவதாக இருக்கவில்லை. விவசாய, கைத்தொழில் துறைகளில் ஈடுபட்ட 70% மக்கள் கூட்டம் கல்வியினால் கவனிக்கப்படவில்லை. ஏட்டுக்கல்வி தனது பிடியினை இறுக்கமானதாகவே தொடர்ந்து வைத்திருந்தது. அந்தக் கல்வி உருவாக்கிய இளைஞர் தொகுதி அன்றைய சமுதாயத்திற் பொருந்தாத/பொருந்த முடியாத ஒன்றாகவே காணப்பட்டது. இந் நிலைமை 1971 ஆம் ஆண்டில் வெளியாகிய டட்லி சீயர்ஸ் அறிக்கையில் அழுத்திக் காட்டப்பட்டது.

பள்ளிக்கூடங்களோ, பல்கலைக்கழகங்களோ நாட்டின் நலனுக்கேற்ப இயக்கப்படாமையும், இடைநிலைப் பள்ளிக்கூடங்கள் உடைநலுங்கா உத்தியோகங்களுக்கே மாணவர்களைத் தயாரிக்கும் கருமத்தில் கண்ணாயிருந்ததும், மாணவர்கள் தேர்வையே இலக்காகக் கொண்டு கல்வி பயின்றதும் சுட்டிக்காட்டப்பட்டன. அந்த வழியில் உருவாகிய கல்வி "பொருளாதாரத்தின் தேவைக்குப் பொருந்தாத ஆட்களை அதிக செலவில் உற்பத்தியாக்குவதனால் விரயமாகவே முடிந்தது" என்பது சீயர்ஸின் கண்டனமாக இருந்தது.

1970 இல் இடம்பெற்ற தேர்தலையடுத்தும் பதவிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசு தத்தெடுத்த பொருளாதாரத்தின் பாதையும் கல்வியின் பாதையும் வெவ்வேறு திக்குகளை நோக்கியவையாக விருந்தன. எந்தச் சமூகத்துக்காகக் கல்வி செயற்படவேண்டுமோ

அந்தச் சமூகத்தின் தேவைகளைக் கல்வியினால் நிறைவுசெய்ய முடியவில்லை. அதன் பயனாக இளைஞர் சமுதாயம் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது. அதன் வெடிப்பே 1971 இல் இடம் பெற்ற இளைஞர் புரட்சி.

ஒரு புறம் அரசியல் நெருக்கடி, மறுபுறம் சமூக-பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு மத்தியில் அரசு திண்டாடியது. தீர்வுக்கு ஒரு வழியாகக் கல்வியில் புதிய பாதையைக் காண அரசு முற்பட்டது. அதுவே 'கல்வியின் புதிய பாதை' என அழைக்கப்பட்ட 1972 இன் கல்விச் சீர்திருத்தங்கள். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமற்ற கல்வியைச் சீரமைத்து, ஒரு சுதந்திர நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறையைப் படிப்படியாகக் கட்டியெழுப்புவது அதன் நோக்கமாக இருந்தது.

எனவே, கல்வியில் திருத்தங்களைச் செய்வது காலத்தின் தேவையாக இருந்தது. 1970 க்குப் பின் வளர்ச்சிக் கிரமத்தில், 1972ச் சீர்திருத்தங்களுக்குப் பின், காணப்பட்ட பிரச்சினைகள் 1981 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட சீர்திருத்த ஆலோசனைகளுக் கூடாக அணுகப்பட்டன. இவை இரண்டுக்குமூடாகவே இக் காலத்துப் புதிய போக்குகள் பரிசீலிக்கப்படுகின்றன.

<u>கருத்திற்கொள்ளப்பட்ட நலிவுகள்</u>

நாட்டின் நலிவுக்குக் கல்வியில் இடம்பெற்றிருந்த குறைபாடுகளும் காலாக இருந்தன என்ற கருத்தோற்றத்தின் அடிப்படையில், அவற்றைக் களைவதன் மூலம், முன்னேற்றங்காண அரசு முனைந்தது. இந்த வகையில் 1972 இல் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதற்கு முன் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், கல்விப் பரப்பை முழுமையாக நோக்காது, குறிப்பிட்ட அம்சங்களில் மட்டும் கவனஞ் செலுத்தியிருந்தன. அக் கவனம் பிரச்சினையின் விளிம்பைத் தொட்டதேதவிர அதனுட் செல்லவில்லை. புதிய பாதை கல்விப் பரப்பு முழுவதையுமே அணுகியது. கல்வியின் செயற்பாட்டிலும் உருவமைப்பிலும் இடம்பெற்றிருந்த குறைபாடுகளை இனங்கண்டு அவற்றுக்குப் பரிகாரந்தேடும் வகையில் அச் சிந்தனைகள் அமைந்திருந்தன.

பள்ளிக்கூட மட்டத்திலான கல்வி மாணவர்களிடையே ஆர்வத்தை வளர்ப்பதாக இருக்கவில்லை. தாம் பெற்ற கல்விக்கும் தமது அன்றாட வாழ்க்கைக்கும் தொடர்புகாண முடியாத மாணவர் மத்தியில் கல்வியில் நாட்டம் குறைவானதாகவே இருந்தது. முதலாம் வகுப்பில் பள்ளிக்கூடத்தில் சேரும் மாணவ தொகையில் கணிசமானோர் இடைநிலைக் கல்வியை நிறைவுசெய்யாது இடையில் விலகிவிடுவது பிரச்சினையாக இருந்தது. பள்ளிக்கூடக் கலைத்திட்டம் வாழ்க்கைப் பொருத்தப்பாட்டுநிலையில் தவறியதாகக் காணப்பட்டது. அந்நிலையை மாற்றி, கலைத்திட்டத்தை வாழ்க்கைப் பொருண்மையுடையதாகச் செய்வதன்மூலம், மாணவர்கள், தமது இடைநிலைக் கல்வி முடியும் வரையிலாவது, பள்ளிக்கூடக் கல்வியை நிறைவுசெய்வார்கள் என எதிர் பார்க்கப்பட்டது. பள்ளிக்கூடப் பருவப் பாகுபாட்டில் பொருத்தமான மாற்றமைப்பும் கலைத்திட்டப் புனரமைப்பும் இவ் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யுமெனக் கருதப்பட்டது. (அத்திட்டத்தினைப் பரிசீலிக்கும் போது அதனை உருவாக்கியவர்கள் கல்வியியற் கோட்பாடுகள், அனுபவங்கள், கலைத்திட்ட நுட்பங்கள், ஆசிரியத்துவம்சார் நெறி முறைகள் ஆகியவற்றினால் வழிநடத்தப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது)

இவற்றுக்குமப்பால், மூன்றாம் நிலைக் கல்விப்பரப்பில், பல்கலைக்கழகங்களின் அமைப்பு முறை, கல்வி நெறிகள் பொருத்தக் குறைபாடுள்ளனவாக இனங்காணப்பட்டன. ஆசிரியர் பயிற்சியில் நிறுவனரீதியில் குறைபாடுகள் கவனிக்கப்பட்டன. அத்துடன், இடைநிலைக் கல்வியை முடித்துக்கொண்ட மாணவர்களுள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படாதவர்க்குக் கல்வியைத் தொடரும் வாய்ப்புக்கள் அருகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

1977 இல் பொதுத்தேர்தலுக்குப் பின் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசின் நடைமுறையில் கல்வி தொடர்பாக அதிகம் வேறுபாடு காணப்படாவிடினும், 1981 இல் அவர்கள் முன்வைத்த கல்விச் சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள் சுட்டிக்காட்டிய நலிவுகளும் கவனத்திற்கொள்ளத்தக்கவை. அவ் ஆலோசனைகள் கோடிட்ட நலிவுகள் சில:-

1. அரசிடமிருந்து கிடைக்கும் மூல வளங்களுக்கும், பெற்றோரிடையே தனித்த செல்வாக்குக்கும் பள்ளிக்கூடங்களுக்கிடையிலான போட்டாபோட்டி அதன் விளைவாக "பெரியனவும் செல்வம் மிக்கனவுமான சிற்சில பாடசாலைகள் மேன்மேலும் பெரியனவும் செல்வம் மிக்கனவுமாக வளர்ந்து வர, சிறியனவும் வறியனவுமான பாடசாலைகள் மேன்மேலும் வறுமைகூர்ந்து வருகின்றன".

2. தேர்வுகளுக்கு மிகையான அழுத்தம் கொடுக்கப்பட்டதால் "கல்வியின் உள்ளடக்கம் வளங்குன்றி வறிதாகிவிட்டது. இணைப்பாட விதான (கலைத்திட்ட) முயற்சிகளின் வாயிலாக வந்துறுகின்ற ஆற்றவும் அருமருந்து அந்தப் பெறுபேறுகள் சுருங்கிவிட்டன. உச்சியை அடைவதற்கு நிகழும் பூசலுக்கே முதலிடம் கொடுத்து உதவுவதால், அதனை அடையவியலாத பெரும்பாலாரின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன".

3. "தேசிய மட்டத்தில் எழுத்துப் பரீட்சைகள் வாயிலாகச் சோதிக்கத்தக்க பாடவிடயத்திலேயே பெரிதுங் கவனஞ் செலுத்தப் படுகின்றது. மற்றும் அதற்கு ஒப்பான அல்லது அதிலும் முக்கியமான பாடவிதான அமிசங்களை - உள்நாட்டு இயைபின் உள்ளடக்கமும் செய்ம்முறைப் பாடங்களும் என்றித்தகைய அமிசங்களை - புறக்கணிக்கும் நாட்டம் காணப்படுகின்றது".

4. "ஆசிரிய சேவையின் வினையாற்றல் பற்பல காரணிகளாற் பாதிக்கப்படுகின்றது. சேவைமுன் பயிற்சி யாதுமில்லாத பத்திரத் தகைமையையே தனியோர் அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களைச் சேவைக்கமர்த்தல்; தாழ்ந்த சம்பள அளவுத்திட்டங்களும் அதனால் ஆசிரியத் தொழிலில் விளையும் அதிருப்தியும்; ஆசிரியரிடையே பாடசாலை மாட்டு விசுவாச உணர்ச்சியையும் ஈடுபாட்டையும் தூண்டிவிடத் தவறுகின்ற அளைத்துத் தீவக இடமாற்றச் சேவை."

அத்தகைய நலிவுகள் நடைமுறைப் பாடசாலை முறைமையினையே மெலியச் செய்துவிட்டன என்பது வற்புறுத்தப்பட்டது.

இவற்றுடன், 1981 கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் மூன்றாம் நிலைக் கல்வியில் - பல்கலைக்கழகக் கல்வி உள்ளிட்ட கல்வியில் - வாய்ப்புக்களின் குறைவிலும் கவனத்தைத் திருப்பின.

இதுவரை குறிப்பிடப்பட்ட வகையில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை நீக்கும் நோக்கில் புதிய போக்குகள் இடம்பெறுவதைக் காணலாம். அவற்றை வெவ்வேறான அமிசங்களின் அடிப்படையில் பகுத்து நோக்குவோம்.

. . . . 7

## பள்ளிக்கூட அமைப்பு

கல்வியின் செயற்பாட்டில் திருத்தங்கள் மேற்கொள்ள முயல்பவர் எவரும் பள்ளிக்கூட அமைப்பினைக் கருத்திற்கெடுக்காமல்விட முடியாது. இத் தன்மையை நமது கருத்திலுள்ள காலப்பகுதியிலும் காணலாம்.

1972 இல் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பள்ளிக்கூட அமைப்பினை, 6 வயதினை ஆரம்ப வயதாகக்கொண்டு, பின்வருமாறு அமைத்தன:-

1. 1-5 வகுப்பு, வயது 6-11, தொடக்க நிலை
2. 6-9 வகுப்பு, வயது 12.-15, கனிட்ட இடைநிலை
3. 10-11 வகுப்பு, வயது 16-17, சிரேட்ட இடைநிலை
   (12 ஆம் வகுப்பு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப் படுவோருக்கு 'அடியெடுக்கும் ஆண்டு'.)

தொடக்கநிலையின் தத்துவம் "பிள்ளைகள் அறியாத வகையில் பாடசாலை வாழ்க்கையில் அவர்களை நுழையச்செய்து வருங்காலத்தில் அவர்கள் மீது சுமத்தப்படவுள்ள பொறுப்புக்களைத் தாங்கும் பக்குவமுடைய வர்களாக்கும்" நோக்கில் அமைந்தது. "பாடசாலை மாணவரின் தகுதிப்பாடுகளையும் ஆற்றல்களையும் அளந்து அவர்களுக்கு ஏற்ற துறை எது எனத் தீர்மானிப்பதற்கான" அடிப்படையாக அந்த மட்டம் கொள்ளப்படவில்லை.

கனிட்ட இடைநிலை மாணவர்களின் ஆற்றல்களையும் தகுதிப்பாடு களையும் அளந்து "அவர்களின் நாட்டத்தை இனங்கண்டு, அவர்களுக்கு அளிக்கவேண்டிய கல்வி எதுவென்று தீர்மானித்து அத்துறையில் முன்னேறுவதற்கு அவர்களை வழிநடத்தும்" நோக்கங்கொண்டதாய் கொள்ளப்பட்டது.

சிரேட்ட இடைநிலை, கனிட்ட இடைநிலையில் திறமை காட்டுபவர் கள் தொடர்ந்து உயர்கல்வியை நோக்கிச் செல்லக்கூடியதான; ஈராண்டுக் கல்வியைக் கொண்டிருந்தது. சிரேட்ட இடைநிலைக் கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறாதவர்கள் தொழில் நுட்பம், வர்த்தகம், கவின்கலைகள் ஆகியவற்றுக்குரிய கனிட்ட கல்லூரிகளில் இடம்பெறலாம். (இவ் இரு முறைகள் மூலமும் பல்கலைக்கழகம் அல்லது அதையொத்த உயர்கல்வியைப் பெறலாம் என வகுக்கப்பட்டது.) 11ஆம் வகுப்பில் கற்றுத்தேறும் மாணவன் பல்கலைக்கழகம்/தொழில் நுட்பம், வர்த்தகம், கவின்கலை, தொழிற்துறை (ஆசிரியர் பயிற்சி உட்பட)

.....8

என்பவற்றுக்குரிய சிரேட்ட கல்வித் தாபனம்/தொழில் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் சேரலாம்.

இடைநிலைக்கு அப்பால் கல்வியைத் தொடர்வதற்கு, பல்கலைக்கழகம் தவிர்ந்த, வேறு நிறுவனங்களில்லாத குறையை அந்தந்தத் துறைகளுக்குரிய சிரேட்ட கல்வித் தாபனங்கள் போக்கு மெனக் கருதப்பட்டது.

அந்தந்த நிலையின் முழுமையையும் நிறைவையும் குறிப்பனவாகத் தேர்வுகளும் குறிப்பிடப்பட்டன. ஐந்தாம் ஆண்டு முடிவுத் தேர்வு, கனிட்ட இடைநிலை முடிவில் பொதுக் கல்வித் தேசியச் சான்றிதழ் தேர்வும், சிரேட்ட இடைநிலை முடிவில் உயர் கல்வித் தேசியச் சான்றிதழ் தேர்வும் முன்வைக்கப்பட்டன.

1981 இன் ஆலோசனைகள் முன்பிருந்த பள்ளிக்கூட அமைப்பில் ஒரு சில மாற்றங்களைக் கருத்திற் கொண்டிருந்தன. அவற்றுக்கேற்ப புதிதாக அமைந்த பள்ளிக்கூட முறைமை பின்வருமாறு:-

1. ஆரம்ப நிலை - 1 - 5 ஆண்டுகள்
2. கனிட்ட இடைநிலை - 6 - 8 ஆண்டுகள்
3. சிரேட்ட இடைநிலை - 9 - 11 ஆண்டுகள்
4. கல்லூரி மட்டம் - 12 - 13 ஆண்டுகள்

(இப்பகுப்பு முன்னைய வழக்கில் "வகுப்பு" என அழைக்கப் பட்டதற்குப் பதிலாக "ஆண்டு" என்ற பிரயோகத்தைப் புகுத்தியது) முதலாம் ஆண்டில் பள்ளிக்கூடத்தில் சேரும் பிள்ளை 5 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தனர். கனிட்ட இடைநிலை மட்டம் மூன்றாண்டுக் கல்வியையும், சிரேட்ட இடைநிலை மட்டம் மூன்றாண்டுக் கல்வியையும் கொண்டிருக்கும் இயல்பில் முன்னைய நடை முறையிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன. "கல்லூரி மட்டம்" என்ற புதிய பாவனை பல்கலைக்கழக அனுமதிக்கான ஆயத்தத்துக்கு அழுத்தம் கொடுப்பது போலத் தோற்றுகின்றது.

இவ்விதம் அமைக்கப்பட்ட பொதுக்கல்வி அகற்சி "பிள்ளையின் வளர்ச்சியினைப் பயனுறுதி வாய்ப்ப மேம்படுத்துவதோடு பிள்ளை எதிர்காலத்தில் வாழவும் தொழில் புரியவும் ஏற்றவாறு தயார்ப்படுத் துவதையும்" நோக்கமாகக் கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு பாகமும் "பிள்ளையினது வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வழங்கத் தக்க உதவியினை உத்தம அளவுக்கு இயலச் செய்யும் வகையில்" வகுக்கப்பட்டது. அந்த அகற்சியின் ஒவ்வொரு மட்ட முடிவையும்

குறிக்கும் வகையில் தேர்வுகள் வகுக்கப்பட்டன. புதிய நடைமுறையாக எட்டாம் ஆண்டு முடிவில் ஒரு தேர்வும், 72 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட பொதுக் கல்வித் தேசியச் சான்றிதழ், உயர்கல்வித் தேசியச் சான்றிதழ் என்பன கைவிடப்பட்டு பழைய வழக்கான க.பொ.த. (சா.நி), க.பொ.த. (உ.நி) தேர்வுகள் மீண்டும் கொண்டுவரப்பட்டன.

புதிய சிந்தனையாக்க கனிட்ட இடைநிலைக்கு அப்பால் நூல் சார் கல்வியைத் தொடர விரும்பாதவர்கள் க.பொ.த. தொழினுட்ப நெறிக்குப் போகவும் / அல்லது தொழில் பயில் நெறிக்குப் போகவும் வழிவகுக்கப்பட்டது. இவை மூன்றாம் நிலைக் கல்வி அதிகார சபை என அமைக்கப்படவிருந்த சபையின் பொறுப்பில் இயங்குமெனக் குறிப்பிடப்பட்டது. சிரேட்ட இடைநிலைக்கப்பால் கல்லூரிசார் மட்டத்துக்குப் போகாதவர்க்கென மூன்றாம் நிலைக்கல்வி அதிகாரசபையின் கீழ் இயங்கவிருந்த தொழினுட்ப, வர்த்தக, கவின்கலை, தொழில்பயிலுனர் நெறிகள் என்பன முன்மொழியப்பட்டன. கல்லூரிசார் மட்டம், மூன்றாம் நிலைக் கல்வி அதிகாரசபை நெறிகள் என்ற இரண்டு வழிகளில் பல்கலைக்கழகமோ அல்லது திறந்த பல்கலைக்கழகமோ அல்லது அவற்றுக்குச் சமமான தொழிற்றுறை நெறிகளுக்கோ போகும் வாய்ப்புக்கள் உத்தேசிக்கப்பட்டன.

<u>கலைத்திட்ட மாற்றங்கள்</u>

எந்தக் கல்வி அமைப்பிலும் அதன் இலக்குகள் செயற்பாடுகள் என்பவற்றுக்கு உயிர்கொடுப்பது அதில் உள்ள பாடப்பரப்புக்கள்/ பாடநெறிகள் என்பவற்றை உள்ளடக்கிய கலைத்திட்டமேயாகும். எமது கருத்திற் கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதியிலும் இந்த உண்மை தெளிவாகத் தெரிகின்றது. எமது கல்வி வரலாற்றில் கலைத்திட்டப் பரப்பினில் பாரிய/முழுமையான மாற்றங்கள் இந்தக் காலப்பகுதியிலேயே முயற்சிக்கப்பட்டன. இக்காலத்துக் கல்விப் போக்கில், விசேடமாக 1972-77க்கு இடைப்பட்ட காலப் பகுதியில், புதிய போக்கு கலைத்திட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டதே என்பது முழுமையாகப் பொருந்துவதாகும். கல்வியில் மாணவர்களது விருப்பினை உறுதிப்படுத்துவதோடு, கல்வியை வாழ்க்கைப் பொருண்மையுடையதாகச் செய்வதும் அம்மாற்றங்களின் உந்து சக்தியாக அமைந்தன.

.....10

'72 ஆம் ஆண்டின் முன்மொழிவுகளில் தொடக்க நிலையாகவிருந்த முதல் ஐந்து வகுப்புக்களில் சமயம், கல்விமொழி, இரண்டாம் மொழி, கணிதம், உடலியல், அழகியற் செயற்பாடுகள், படைப்புச் செயற்பாடுகள், சூழல்சார் செயற்பாடுகள் என்னும் பாடங்கள் இடம் பெற்றன. செயற்பாடுகள் மூலம் மாணவர்களது கல்வியில் அவர்களுடைய நேரடிப் பங்கும் அதன் பயனும் உறுதிப்படுத்தப்படும் எனக் கருதப்பட்டது. போதனையிலும் பார்க்கச் சாதனை கூடிய பயனளிக்கும் என்ற கல்விக் கோட்பாடு இதன் அடிப்படையில் செறிந்திருந்தது. அவற்றுக்கூடாகக் கல்வியில் மாணவர்கள் சுயவிருப்புடன் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.

கனிட்ட இடைநிலையில் (6-9 வகுப்புக்கள்) இடம்பெற்ற மாற்றங்கள் மிகவும் காத்திரமானவை. சமயம், கல்விமொழி, இரண்டாம் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற் பாடம், சுகாதாரமும் உடலியற் கல்வியும், முன்தொழிற் படிப்பு 1 (கமம், வணிகம், மனையியல், மரவேலை, உலோகவேலை, மட்பாண்ட வேலை, நெசவு), முன்தொழிற் படிப்பு 11 (வீட்டுத்தொழில்கள் உட்பட அவ்வப் பகுதியிலுள்ள பிரதான தொழில்கள்) என்பன பள்ளிக்கூடப் பாடங்களாகப் புகுத்தப்பட்டன.

அம் மாற்றங்களில் கல்வியுலகின் கவனத்தை ஈர்த்த அம்சங்கள் இரண்டு - (1) ஒன்றிணைந்த பாடத்திட்டம். (2) முன்தொழிற் படிப்பு. முன்னர் தனித்தனியாகக் கற்பிக்கப்பட்ட பாடங்களிடையே காணப்பட்ட பொதுமை அடிப்படையில் அவற்றுட் சில ஒன்றிணைக்கப்பட்டன. அவ்விதம் இணைக்கப்பட்டமையால் உருப்பெற்ற பாடங்கள் விஞ்ஞானம், சமூகக் கல்வி என்ற இரண்டுமாகும். முன்பு இரசாயனம், பௌதீகம், உயிரியல் எனத் தனித்தனியாகக் கற்பிக்கப்பட்டவை விஞ்ஞானம் என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டும், வரலாறு, புவியியல், குடிமையியல் என்பன பொருளியல், சமூகவியல் அம்சங்கள் சிலவும் சேர்க்கப்பட்டுச் சமூகக்கல்வி என ஒன்றிணைக்கப்பட்டும் கலைத்திட்டத்தில் இடம்பெற்றன. தனித்தனியான பாடங்களாக அந் நெறிகள் முன்னர் கற்பிக்கப்பட்டபோது அம்மட்டத்துக்குப் பொருந்தாத/விரும்பத்தகாத குறுகிய பாதையில் அறிவு செலுத்தப்பட்டது. புதிய ஒன்றிணைப்பின் வழியில் மாணவனது வாழ்க்கைக்கு வளமூட்டக்கூடிய பரந்த அடிப்படையிலான அறிவு வளர்க்கப்பட்டது.

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA



அழகியற் பாடம் என்ற நெறி இசை, நடனம், சித்திரம் என்ற மூன்றில் விரும்பிய ஒன்றைத்தெரிவு செய்ய வழிவகுத்தது. நல்லதை நயக்கும் திறனையும் மனப்பாங்கையும் அதற்கூடாக வளர்க்கத் திட்டமிடப்பட்டது. இந்த நயப்புணர்ச்சி மாணவனுடைய ஆளுமையின் நிறைவுக்கு அடிப்படையான ஒன்றாகும் என்பதும் கருத்திற்கொள்ளப் பட்டது.

முன் தொழிற் படிப்புக்கூடாக மாணவன் தொழில் உலகுக்கு அறிமுகஞ் செய்யப்பட்டு வாழ்க்கையுடன் இணைக்கப்படும் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. அதற்கும் தொழிற் கல்விக்கும் வேறுபாடு உண்டு. தொழிற் கல்வியானது ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு வேண்டிய அறிவு, திறன் என்பவற்றை வழங்குவதாகும். ஆனால், முன்தொழிற் படிப்பு அன்றாட வாழ்விலும், வேறு எந்த வேலையிலும், பயன்படக்கூடிய உடையியக்கத் திறன்களைப் பயிற்றுவதைக் கருத்திற் கொண்டது. முன் தொழிற் படிப்பு 1 'அறிமுறைப்பாடம்' என்ற அடிப்படையில் தொழில்களைப் பற்றிய அடிப்படை அறிவை வழங்குமெனக் கருதப்பட்டது முன்தொழிற் படிப்பு 11 அல்லது முன்தொழிற் 'செயன்முறைப் பாடம்' அவ்வப் பகுதியிலுள்ள முக்கிய தொழில்களைப் பயிற்றுவதை நோக்க மாகக் கொண்டிருந்தது. அவற்றுக்கென (1 & 11) ஒதுக்கப்பட்ட பாடவேளைகளில் ஒன்று நாட்டின் பொருளியலமைப்பினைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெறவும் கேத்திர கணித பொறிமுறை வரைவைப் பயிற்றவும் ஒதுக்கப்பட்டது. கேத்திர கணித பொறிமுறை வரைவு எந்தத் தொழிலையும் மேற்கொள்ள உதவக்கூடிய அடிப்படை அறிவை வழங்குமென நம்பப்பட்டது.

முன்தொழிற் படிப்பு என்பது இலங்கைக் கல்வியில் முற்றிலும் புதிய தொரு முயற்சியாகும். அதனோடு இணைந்த ஏனைய பாடங்களுடனான வழியில் சிறந்த பொதுக் கல்விக்கும் சிறந்த தொழிற் கல்விக்கும் வித்திடலாம் எனக் கொள்ளப்பட்டது. அதுவரை காலமும் தொழிலுலகிலிருந்து முற்றிலும் அந்நியப்படுத்தப்பட்டிருந்த மாணவன் தனது வாழ்வில் தொழில்களைப் பற்றிய அறிவையும் அவற்றுடனான தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்வதனால் அவன் பெறும் கல்வி பூர்த்தியுள்ள, நடைமுறைப்பயனைக் குறித்ததாகக் காணப்பட்டது.

முன்தொழிற் படிப்பு நாட்டுக்கே புதியதாகையால் அதற்கெனக் கலைத்திட்டம் தெளிவாக முன்வைக்கப்படவில்லை. ஆசிரியர்களும், சிரேட்ட மாணவர்களும்; உரிய தொழில் விற்பன்னர்களுடனும் கலைத்திட்டத்தைத் தயாரிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதுவரை கலைத்திட்டச் செயற்பாடுகள் எல்லாம் மேலிடத்தில் உருதிப்படுத்தப்பட்ட மரபு நீங்கி, ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அதனை உருவாக்குவதில் பங்கெடுக்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டது.

ARCHIVES

ஆனால், துரதிஷ்டவசமாக, இடவேறுபாடு, வசதிவேறுபாடு முதலியன முன்தொழிற் படிப்பைக் கற்பிக்கப் பயன்படுத்தப்பட்ட தொழில்கள் இடையே அந்தஸ்து பேதங்களைப் புகுத்தியமை அதன் நோக்கத்தையே சிதறடித்தன.

அவ்வித்மான பொதுக் கலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட, ஒன்பதாண்டுக் கல்விக்கூடாக (1 - 9 வகுப்புக்கள்) நாட்டில் கட்டாயக் கல்வி[illegible] பொருண்மையுடையதாக்கலாம் எனச் சிந்திக்கப்பட்டது. அக் கலைத்திட்டம், பயில்வோருக்கு அதன் பயன்பாடு தெளிவான நிலையில், உரிய காலத்துக்கு முன்பே பள்ளிக்கூடத்தைவிட்டு இடைவிலகுவோரின் எண்ணிக்கையைக் குறைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஒன்பதாண்டுக் கலைத்திட்டம் முடியும் வரை எல்லா மாணவர்களையும் பள்ளிக்கூடத்துக்கு வரச்செய்ய முடியும் என்ற நம்பிக்கை தோனித்தது. அந்த அடிப்படையில் 6 - 15 வயது உள்ளிட்ட பருவத்தினர் அனைவரும் கல்விபெறும் சூழ்நிலையை உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

1981 இன் சீர்திருத்த முன்மொழிவுகள் ஆரம்ப நிலையில் முன்வைத்த கலைத்திட்டம் பிள்ளையின் ஆக்கச் செயற்பாட்டுக்கு அழுத்தம் கொடுத்தன. பிள்ளையிடம் இயல்பாகக் காணப்படும் புதியது காணும் வேட்கையினைத் தூண்டித் தானாகவே விடயங்களைத் தெரிந்து கொள்ள விழையும் பாங்கினை வளர்க்கும் முறையில் பாடங்கள் வகுக்கப்பட்டன. போதனைக்குப் பதிலாகச் சாதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை வலுப்படுத்தப்பட்ட போதும் "வாசிப்பு, எழுத்து, எண் ஆகியவற்றின் அடிப்படைத் தேர்ச்சிகள் புறக்கணிக்கப்படாது" அவற்றை "இயந்திர இயக்க முறையிலன்றித் தேர்ந்தறி பாங்கிற்" பயிலும் முறைமை புகுத்தப்பட்டது.

கனிட்ட இடைநிலையில் புகுத்தப்பட்ட பாடங்கள் சில முன்னைய (1972) போக்கிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன. முதல்மொழி, சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற் கல்வி, வாழ்க்கைத் தொழிற் திறன்கள், உடனலவியலும் உடலியற் கல்வியும் என்ற ஒன்பது பாடங்கள் புகுத்தப்பட்டன. அவற்றுடன் பள்ளிக்கூடம் விரும்பினால் நடைமுறைச் சிங்களம்/நடைமுறைத் தமிழ் ஒன்றைப் பத்தாவது பாடமாகக் கற்பிக்கலாம் என வகுக்கப்பட்டது. அக்கலைத் திட்டம் "மாணாக்கள் ஆரம்ப மட்டத்தில் முயன்று பெற்ற அடிப்படை அறிவினையும் தேர்ச்சித் திறன்களையும் வலுப்படுத்திக்

கொள்ள உதவுவதோடு மேற்கல்விக்கு அத்திவாரம் இடுவதாயும் அமையும்; அத்துடன், ஒரு சில தொழிற் தொகுதிக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சித் திறன்களைத் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்வதன் மூலம் படிப்படியாக வேலை உலகிற்கு அறிமுகம் செய்யவும் வழிகோலும்" எனக் குறிப்பிடப்பட்டது. கலைத்திட்டத்தூடாகத் தேசிய ஒருமைப்பாட்டு நோக்கினை வலியுறுத்தும் எண்ணம் முதற்தடவையாக முன்வைக்கப்பட்டது. அதனை, மேற்கூறப்பட்ட பாடங்களுள் பொருத்தமான அம்சங்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் அடையலாம் என எதிர்பார்த்தனர்.

சிரேட்ட இடைநிலை மட்டத்திலான கலைத்திட்டம் கனிட்ட இடைநிலை மட்டத்தைப் பின்பற்றுவதாகவே அமைந்தது. இப் பருவத்துக் கல்வி இருவகைப் பயன்பாடுடையதாகக் கருக்கொள்ளப்பட்டது. இடைநிலை மட்டத்தோடு தொழில்களில் சேருவோருக்கு தகைமைகளை வழங்கும் இறுதிநிலைப் பண்புடையதாகவும், உயர்கல்விக்குப் போவோருக்கு உயர்கல்வி உலகுக்கு வழிகாட்டுவதாகவும் திட்டமிடப்பட்டது. இம் மட்டத்திலும் தேசிய ஒருமைப்பாடு நோக்கிற் கொள்ளப்படுவதைக் காணலாம். முன்னைய பருவத்திற் குறிப்பிடப்பட்ட வழிமுறைகளுடன் புதிய ஒரு கருத்தும் புகுந்துகொள்கின்றது. முன்னைய பருவத்தில் விருப்புப் பாடமாக (பத்தாவது பாடமாக) முன்வைக்கப்பட்ட நடைமுறைச் சிங்களம்/நடைமுறைத் தமிழ் இம் மட்டத்தில் அழகியற் பாடத்துக்கு மாற்றாகக் கொள்ளப்படும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## மூன்றாம் நிலை மட்டம்

கருத்திற் கொள்ளப்படும் காலப் பகுதியாகிய 1970க்குப் பிற்பட்ட காலப்பகுதி பள்ளிக்கூட மட்டத்துக்கும் அப்பால் மூன்றாம் நிலைமட்டத்திலும் புதிய போக்குகளை வெளிப்படுத்துவதைக் காணலாம். முக்கியமான சிந்தனைகளும் செயற்பாடுகளும் பல்கலைக்கழகக் கல்வியோடு தொடர்புபட்டவையாக இருப்பினும் ஏனைய பரப்புக்கள் பற்றிய கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையேயாகும்.

1972ச் சீர்திருத்தங்கள் பல்கலைக்கழகத்துக்குப் புறம்பாக, பல்கலைக்கழகக் கல்விக்கு அனுமதி பெறமுடியாத மாணவர்க்கென, கவின்கலை, வணிகம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் பற்றிக் குறிப்பிட்டன. ஆசிரியர் பயிற்சியும் அதே வழியில் சிந்திக்கப்பட்டது. வழக்கிலிருந்த ஆசிரிய

பயிற்சிக் கல்லூரிகள் பொதுப் பயிற்சிக் கல்லூரிகள், சிறப்புப் பயிற்சிக் கல்லூரிகள் என இருவகைகளாக வளர்க்கப்பட உத்தேசிக்கப் பட்டது. பொதுப் பயிற்சிக் கல்லூரிகள் 1-5 வகுப்பு ஆசிரியர்களுக் காகவும், சிறப்புப் பயிற்சிக் கல்லூரிகள் 6-9 வகுப்பு ஆசிரியர்களுக் காகவும் கருக்கொள்ளப்பட்டன. அவற்றின் வளர்ச்சி சம்பள வேறு பாடற்ற சமநிலைக்கு வித்திடுவதாகத் தோற்றினாலும் திட்டம் எதுவும் தெளிவானதாக இருக்கவில்லை. பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளி லிருந்து மூன்றாண்டுகளாக உயர்த்தப்படவிருந்தது. கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம் ஆசிரியர் கைந்நூல்கள்மூலம் பயிற்சிபெறாத ஆசிரியர்களுக்கு வழிகாட்டுவதாகும்.

இவை தொடர்பான 1981 ஆம் ஆண்டின் முன்மொழிவுகளில் பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சி ஆகிய பரப்புக்களுக்குப் புறம்பாக மூன்றாம்நிலைக் கல்விச் செயற்பாடுகளை மூன்றாம்நிலைக் கல்வி அதிகார சபை என்ற அமைப்பின்கீழ் வளர்க்க உத்தேசிக்கப்பட்டது. ஆசிரிய கல்வியில் பயிற்சிக் கல்லூரிகளின் வளர்ச்சியோடு கல்வியியற் கல்லூரிகள் போன்ற தொழிற்துறைக் கல்லூரிகள் பயனளிக்கும் என எண்ணப்பட்டது.

பள்ளிக்கூட மட்டத்துக்கும் அப்பால், இக் காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளாகியதும், பாரிய பிரச்சினைகளை உருவாக்கியதும் பல்கலைக்கழக மட்டத்திலான போக்குக்களேயாகும். பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக இக்காலப் பகுதியில் தொடக்கத்தில் இரண்டு பிரதான செயன்முறைகளை அவதானிக்கலாம். அவற்றைத் தூண்டிவிடுவதாக 1971 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இளைஞர் புரட்சி விளங்கியது என்று கொண்டால் தவறாகாது. அப்புரட்சிக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டமை/கொள்ளப்பட்டமை பல்கலைக்கழகங்களை அரசின் கட்டுப் பாட்டில் கொண்டுவரும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. '71 இல் வெடித்த இளைஞர் புரட்சியைத் தோற்றுவித்து வளர்த்தவை பல்கலைக் கழகங்களில் காணப்பட்ட, நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தோன்றி வளர்ந்துவந்த, அடிப்படைப் பிரச்சினைகள் என ஆரம்பத்தில் சுட்டப்பட்ட காரணிகள் மீண்டும் நினைவுகூரத்தக்கன.

பல்கலைக்கழகங்களை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாக 1972 ஆம் ஆண்டு உயர்கல்விச் சட்டம் அமைந்தது. அன்றைய நிலையில் தனித்தனி அமைப்புக்களாகச் செயற்பட்டுவந்த ஐந்து பல்கலைக்கழகங்களும் - இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற மத்திய வட்டகை அமைப்பின்கீழ் - ஐந்து வளாகங்களாக மாற்றியமைக்கப் பட்டன. இவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் அமைச்சரின் கையில் இடம்பெற்றது. 'புனரமைப்பு' என்ற அந்த நடவடிக்கையை நியாயப்படுத்தக் கூறப்பட்ட காரணம் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் ஒரு நிருவாக அமைப்பாக்குவதன் மூலம் செலவுச் சுருக்கத்தை உறுதிப் படுத்துவதுடன் பாடநெறிகளில் பயனற்ற/விரும்பத்தகாத இரட்டிப்பு நடைமுறைகளைத் தவிர்ப்பதும் எனக் கூறப்பட்டது. (அக்காலத்துக் கணிப்பின்படி, செலவில் சுருக்கத்துக்குப் பதிலாக 15% அதிகரிப்பே காணப்பட்டது.)

பல்கலைக்கழகக் கல்வியில் இக்காலப் பகுதியின் ஆரம்பத்தில் தோன்றிய புதிய போக்குகளில், பல்கலைக்கழக நிருவாக மத்தியப்படுத் தல் செயற்பாட்டுக்கும் மேலான, இரண்டாவது செயற்பாடு பல்கலைக் கழக மட்டத்தில் இடம்பெற்றிருந்த கற்கைநெறிகள் தொடர்பானதாகும். அன்றைய கட்டத்தில் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டுவந்த நெறிகள் அதீத நூல்சார்புடையவையாகவும் வாழ்க்கைப் பொருத்தப் பாடு குறைந்தவையாகவும் இருந்தமையும், அதனால் உருவாகிய பிரச்சினைகளும், ஏற்கெனவே குறிப்பிடப்பட்டன. விவசாய-கைத்தொழிற் பொருளாதார அமைப்பைக் கொண்ட சமூகத்தில் கலைத்துறைத் தகைமை களுடன் வெளியேறிய பெருந்தொகையினரான பட்டதாரிகள் தொழிற் தொடர்பில் பொருத்தப்பாடற்றவர்களாகவே விளங்கினர். அவர்கள் தமக்குப் பொருத்தமான தொழில் எதையும் பெற முடியாதவர்களாகவும், தாம் வாழ்ந்த சமூகத்திற்குப் பயன்படக்கூடிய தொழில் எதையும் செய்யும் திறனற்றவர்களாகவும் திக்குமுக்காடும் நிலைமை காணப்பட்டது. அக் குறைபாட்டினை நீக்கி, உயர்கல்வியைச் சமூகப் பயனுள்ளதாக ஆக்கும் முயற்சியில், தொழில்சார் கற்கைநெறிகள், பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

தொழில்சார் கற்கைநெறிகள், வளர்ச்சியுறும் சமூக-பொருளா தார அமைப்பில் பயனுள்ள வகையில் தொழில் முயற்சியில் ஈடுபடுத்தப் படக்கூடிய, பல்கலைக்கழகப் பட்டதாரி ஆளணியொன்றினை உற்பத்தி யாக்கும் நோக்கினைக் கொண்டிருந்தன. 1972-'76க்குரிய ஐந்தாண்டுக் கல்வித் திட்டம் குறிப்பிட்டதுபோல "கல்வியமைப்பின் வெளியீடுகளான பயிற்சி, திறன்கள், மனப்பாங்குகள், அபிலாசைகள் அனைத்தும் சமூக-பொருளாதார சூழலுடன் தொடர்புபடுத்தப்படவேண்டும்" எனக்

கருதப்பட்டது. அந்தத் தீர்மானத்தின்படி, பொதுநிதியும் வரி விதிப்பும், கல்வி, பெருந்தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும், வெகுசனத்தொடர்பு, நூலகக் கலை, அபிவிருத்திக் கற்கைநெறி, என்ற புதிய கற்கைநெறிகள் பல்கலைக்கழகக் கல்வியில் இடம் பெற்றன.

உயர்கல்வியை நாடிய ஆயிரக்கணக்கான மாணவர்கள், அதற்குரிய இடவசதி இல்லாமையினால், உயர்கல்வியைப் பெறமுடியாத அவலநிலையைப் போக்கும் நோக்குடன் திறந்த பல்கலைக்கழகத்தை நிறுவுவது என்ற செயற்பாடும் இக்காலத்தில் பல்கலைக்கழகக் கல்வியில் ஒரு புதிய போக்கு எனலாம்.

இக்காலப் பகுதியில் பல்கலைக்கழகக் கல்வியில் தோன்றிய இன்னொரு புதிய போக்கு, நாட்டின் வாழ்க்கையைச் சகல துறைகளிலும் பாதிப்புக்குள்ளாக்கிய போக்கு, பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக முன்வைக்கப்பட்ட கொள்கையாகும். நாட்டில் தாய்மொழிக்கூடான கல்வி என்ற அடிப்படையில் கல்வி விருத்தியில் ஏற்பட்ட பெருக்கம் அறுபதுகளில் பல்கலைக்கழக மாணவ எண்ணிக்கையில் திடீர் பெருக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. அந்த வளர்ச்சியில், விஞ்ஞானம்சார் நெறிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களிடையே, விகிதாசார அடிப்படையில், சிங்கள மாணவர்களிலும் பார்க்க தமிழ் மாணவர் அதிகமாகக் காணப்பட்டமை பல்வகைப்பட்ட பிரசாரங்களுக்குக் காலாயிருந்தது. பெருமளவிலான இன உணர்வுக் காழ்ப்புடன் கூடிய அரசியற் பக்கச்சாய்வுகளின் விளைவாக 1970இல் பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் அடிப்படையில் மேற்கொள்ளப் படும் வழக்குப் புகுத்தப்பட்டது. அக் கொள்கையின் மறுக்கமும், காலப்போக்கில் பல்வகைப்பட்ட அழுத்தங்கள் காரணமாக அதில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களும், வரலாற்றில் இடம்பெற்றுவிட்டன. அவற்றின் பெறுபேறுகள் எமது சமூகத்தின் இன்றைய அவலங்கள் அனைத்துக்கும் வித்திட்டன என்பதை அறியாதவர் எவரும் எம்மத்தியில் இருக்கமுடியாது.

1977 இல் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கொள்கைகள், பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக, இரண்டொரு விடயங்கள் தவிர, பொதுப்படையாக முன்னைய போக்கினைத் தொடர்வனவாகவே காணப்பட்டன. நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழகங்களின் சுயாதீனம் மீளளிக்கப்படுகின்றது என்ற கருத்துடன், 1972க்கு முந்திய நிலைப்பாட்டில், தனித்தனிப்

பல்கலைக்கழகங்கள் தோன்றின. அவற்றின் எண்ணிக்கையில் பெருக்கமும் மாணவர் அனுமதியில் அதிகரிப்பும் வளர்ச்சிவழியில் ஏற்பட்டவையேயாகும். பல்கலைக்கழகக் கல்வியின் செயற்பாட்டை 'ஒன்றிணைப்பதாக' இயங்குகின்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புதியதொரு படைப்பாகும்.

பல்கலைக் கழகங்களின் கற்கை நெறிகளில் முன்னைய அரசுக் காலத்தில் புதியதாகப் புகுந்துகொண்ட தொழில்சார் கற்கைநெறிகள் இடைநடுவில் கைவிடப்படுவதைக் காணலாம். அக் கற்கைநெறிகள் முதன் முதல் தொடங்கப்பட்டபோது அவற்றையொட்டிய உயர்வான எதிர்பார்ப்புக்கள் பல. பல்வேறு காரணங்களினால் அவை வெற்றி கரமாகச் செயற்படமுடியவில்லை. '77 இல் புதிய அரசு பதவி ஏற்றுக்கொண்டபோது எடுத்த தீர்மானங்களில ஒன்று அக் கற்கை நெறிகளைக் கைவிடுவதென்பதாகும். மரபுவழியான கற்கைநெறிகள் மீண்டும் முதன்மைபெறும் நிலைமையே காணப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் நடைமுறையுடன் புகுந்துவிட்ட வீதாசாரச் சிந்தனைகள் - திறமை, மாவட்டம், பின் தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையிலானவை - தொடர்வதைக் காண்கிறோம். திறமைக்கே முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கள் பல மட்டங்களிலும் பல இடங்களிலும் வற்புறுத்தப்பட்டும் 'நன்முறைப் பாரபட்சம்' என்ற சமாதானம் இன்னும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

## கல்வியும் மொழியும்

இக்காலப் பகுதியில் கல்வியில் மொழிக்குரிய பங்களிப்புத் தொடர்பாகப் புதிய போக்குகள் என்ற பார்வை தேசிய ஒருமைப் பாட்டினை மொழிக் கல்வியோடு தொடர்புபடுத்தும் பாங்கில் செலுத்தப்படலாம். போதனாமொழி எது என்ற கொள்கை, 1970க்கு முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்ட, தாய்மொழித் தத்துவத்தின் தொடர்ச்சியாகவே காணப்பட்டது. அத் தத்துவத்தின் கடைப்பிடிப்பில் புகுந்துவிட்ட கலப்படம் - பல்கலைக்கழகம் தனது போதனாமொழியைத் தீர்மானித்துக்கொள்வது என்ற வழக்கு - எதுவித மாற்றமும் இல்லாமல் தொடரப்பட்டது. எனினும், அதைச் செயற்படுத்துவதில் சில 'மறைவான' குறுக்குவழிகள் முயற்சிக்கப்பட்டனவா என்ற எண்ணம் தலைதூக்குவது தவிர்க்கமுடியாததாகிறது.

பள்ளிக்கூடக் கலைத்திட்டத்தில் போதனாமொழியாகக் கற்பிக்கப்பட்ட சிங்களம், தமிழ் இரண்டையும் அவற்றின் பெயரால் குறிப்பிடாமல் கல்வி மொழி, முதலாம்மொழி என்ற பாவனைகள் அரசியல் பின்னணியில் அமைந்தனவா என்ற சந்தேகம், பழைய வரலாற்றுடன் இணைத்துப் பார்க்கும்போது, நியாயமானதாகவே தோன்றியது. 1968 இல் கல்வி மந்திரியான I.M.R.A. இரியகொல முன்வைத்த 'போதனாமொழி பெற்றோர் தெரிவாக அமையவேண்டும்' என்ற முன்மொழிவுகள், தமிழ் மக்கள்மீது சிங்களத்தைத் திணிக்கும் ஒரு மறைமுக நடவடிக்கை என்ற ஏகோபித்த கண்டனத்தின்முன் கைவிடப்பட்டமை வரலாறு. அந்த அனுபவத்தில் புதிய பாவனைப் பெயர்களும் ஏதாவது மாற்றுருவிலான சிந்தனையா என்ற கேள்வி நியாயமானதாகத் தோன்றியது.

மொழிக்கல்வி தொடர்பாக எமது கவனத்தைக் குறிப்பாகக் கவர்வது இரண்டாம், மூன்றாம் மொழிகள் பற்றிய நடைமுறைகளே. 1970-'90 என்ற காலப்பகுதி முழுவதிலும் இரண்டாம் மொழி பற்றிய போக்கு ஒன்றித்ததாகவே காணப்பட்டது. இரண்டாம் மொழியாக, தமிழ் - சிங்கள மாணவர்கள் எல்லோர்க்கும், ஆங்கிலத்தைக் கற்பிப்பது எ கொள்கையில் பேதம் இல்லை, அதைக் கற்பிக்க வேண்டிய தேவை பற்றி ஆங்கிலத்தின் சர்வதேச முக்கியத்துவம், உயர்கல்வியில் அதன் உபயோகம் என்பன- கருத்தாளர்க்கும் வகையில், ஏறத்தாழப் பிரசாரம் செய்வதாக, வலியுறுத்தப்பட்டுவந்துள்ளது. நடைமுறைப் பிரச்சனைகள் காரணமாக, தகுதி வாய்ந்த/பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை, அதனை எந்த வகுப்பில் ஆரம்பிப்பது என்பதில் தளம்பல் நிலைகள் காணப்பட்டன. 72 இல் மூன்றாம் வகுப்பிலே சிறந்த ஆரம்பம் என ஏற்றுக்கொண்டாலும், முன் குறிப்பிட்ட பிரச்சினைகள் காரணமாக, ஆறாம் வகுப்பிலேயே ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. 1981 க்குப் பின் பழையபடி மூன்றாம் ஆண்டில் ஆரம்பிக்கும் வழக்குத் திரும்பினாலும், அண்மைக்காலத்தில் முதலாம் ஆண்டிலேயே ஆரம்பிக்கலாம் என்ற கூற்றுக்கள் இன்றுவரை தெளிவற்ற நிலையினையே பிரதிபலிக்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு, இனங்களுக்கிடையிலான தொடர்பு, புரிந்துணர்வு என்பவற்றுக்கு மொழிக் கல்வியின் பங்களிப்பு அரசுகளின் சிந்தனைகளில் இடம்பெறுவதை இக் காலப்பகுதியில் காணலாம். 72 இன் 'கல்வியின் புதிய ப தமிழ் பிள்ளைகட்கு சிங்களம் போதிப்பது அவசியம் எனக் குறிப்பிட்டது.

மூன்றாம் மொழியாகத் தமிழ் மக்களுக்குச் சிங்களத்தைப் போதிக்க முற்பட்ட அரசு சிங்கள மக்களுக்குத் தமிழ் போதிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய கொள்கை அரசியல் ஆபத்துக்கு இட்டுச்செல்லும் என்று கருதினார்களோ என்பது புதிராகவே உள்ளது. 'கல்வியின் புதிய பாதை' அது தொடர்பாகக் கருத்தைத் தெரிவிக்கையில் "பல நாடுகளில் சிறுபான்மை இனத்தவருக்குப் பெரும்பான்மையோரின் மொழி கட்டாயமாகப் படிப்பிக்கப்படுகின்றது. ஆனால் எந்த நாட்டிலும் சிறுபான்மையோரின் மொழி பெரும்பான்மையோருக்குக் கட்டாயமாகப் படிப்பிக்கப்படுவதை நாம் அறியோம்" என்று கூறுகின்றது. அந்தத் தொடர்பில் சுவிற்சர்லாந்தின் இலட்சிய உதாரணம் எவருடைய கண்ணுக்கும் கருத்துக்கும் படவில்லை என்பது வேதனைக்குரியது. அத்துடன், தமிழைப்போன்று மொழி வளர்ச்சியில் முன்னேறிய சிறுபான்மை மொழி இந்தியா தவிர வேறு நாட்டில் இல்லை என்பதையும் அவர்கள் மறந்தமையும் வேடிக்கையானதே.

77ஆம் ஆண்டில் மாறிய அரசு புதிய வழிமுறைகளைச் சிந்தையிற் கொண்டமை நோக்கத்தக்கது. இணைப்பு மொழி என்ற சித்தாந்தம் முன்வைக்கப்பட்டது, மொழிக்கூடாகப் பல்லின/பன்மொழி மக்களை இணைப்பதன் தேவை உணரப்பட்டமை வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த இணைப்பின் ஊடகமாக முன்வைக்கப்பட்ட மொழியாகிய ஆங்கிலம் அதற்குப் பொருத்தமானதுதானா என்பதைக் கொள்கைவகுப்பாளர் கருத்திற்கொள்ளத் தவறிவிட்டனர். ஆங்கிலமே தெரியாத பெரும்பான்மை எண்ணிக்கையினராகிய சிங்கள-தமிழ் மக்களை ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒருவரோடொருவர் இணைந்து செயற்படவைப்பதற்கு எந்த ஒரு காலத்திலும் ஆங்கிலம் பயனளிக்காது என்ற யதார்த்த நிலை எவராலும் மறுக்கமுடியாது, தமிழ் மக்களிடையே சிங்களமும், சிங்கள மக்களிடையே தமிழும் அக் கைங்கரியத்தை நிறைவேற்றும் என்பதே உண்மையாகும்,

<u>தொகுப்பு</u> :-

நமது கவனத்திற் கொள்ளப்பட்ட இருபது ஆண்டுக் காலப்பகுதியில் (1970-1990) இலங்கைக் கல்வியின் போக்கினைத் தொகுத்துப் பார்க்கையில் பல புதிய அம்சங்கள் காலத்துக்குக் காலம் புகுத்தப்பட்டன. என்பது உண்மையே. கல்வி மட்டத்தின் பல பகுதிகளும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் முன்னேற்றத்துக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஏற்கனவே

குறிப்பிட்டதுபோல, 1972 இல் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களும் 1981 இல் முன்வைக்கப்பட்ட கல்வித் திருத்தத்துக்கான ஆலோசனைகளும் அப் புதிய போக்குகளின் அடிப்படைகளாக அமைந்தன. இரு வேறுபட்ட அரசியற் சித்தாந்தங்களைக் கொண்ட இரண்டு அரசாங்கங்களில் அவை முன்வைக்கப்பட்ட நிலையில் அவற்றுக்கிடையில் காணப்பட்ட தொடர்ச்சிகளோ/தொடர்ச்சியின்மைகளோதான் அச் சிந்தனைகளின் வெற்றி, தோல்விகளைத் தீர்மானித்தன, அந்த வகையில், அவற்றுட்சில இலங்கையின் கல்வி வரலாற்றில் சம்பவங்களாகவே முடிந்துவிட்டன. தொடர்ச்சியான, அர்த்தமான, அமுலாக்க நடவடிக்கைகள் இல்லாமையினால் அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன்கள் கிட்டாமற் போய்விட்டன.

திட்டமிடல் என்பது வெறும் அறிவுசார் முயற்சியாக இருப்பதில் எதுவித அர்த்தமுமில்லை, நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் அடையப்படும் ஒழுங்கில் அவை அமைக்கப்படுதல் அவசியம். திட்டத்தின் தொடர்ச்சியும் அடைவும் அது அமுலாக்கப்படும் முறையில் தங்கியுள்ளன என்பது அனுபவ உண்மையாகும். தலைமைத்துவ மட்டத்தில்-அரசோ அல்லது அமைச்சரோ மாற்றம் ஏற்படும்போது முன்னைய கொள்கைகள் கைவிடப்படுவதனால் அல்லது பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதனால் ஆரம்பத்தில் வகுக்கப்பட்ட நோக்கம் சிதறுண்டுபோவதைக் காணலாம். பெரும்பாலான திட்டங்கள் தோல்வியடைவதற்கு இது ஒரு முக்கிய காரணியாக இனங்காணப்பட்டுள்ளது. எமது நாட்டில் நடந்ததும் இதுவே. அரசாங்கங்கள் மாறியபோதும் அமைச்சர்கள் மாறியபோதும் முன்னைய கொள்கைகளும் மாற்றமடைந்தன. அத்தகைய மாற்றங்கள் எமது கல்வியில் சிறந்த பயனைக் கொடுக்கக்கூடிய சிந்தனைகள் செயலற்றுப் போவதற்கு காரணமாக அமைந்தன என்பது பொருந்தும்.

கற்கை நெறிகளில் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான ஆலோசனைகள் ஏற்றமுறையில் தொடரப்படாததனால், சமூகம் பாதிக்கப்பட்டது. பள்ளிக்கூட மட்டத்தில் முன் தொழிற்படிப்பும், பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்சார் கற்கை நெறிகளும் இதற்குப் பொருத்தமான உதாரணங்களாகும். முன் தொழிற்படிப்பு கைவிடப்பட்டு, வாழ்க்கைத் தொழிற் திறன்கள், தொழில்நுட்பப் பாடங்கள் புகுத்தப்பட்டபோதும் தொழிலின் மகத்துவத்தைப் பேணுதல் வேலை உலகுக்கு மாணவர்களை அறிமுகஞ் செய்தல் என்ற விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் முன்னையதன் அடிப்படைச் சிறப்பு இன்று இல்லாமற் போய்விட்டது என்பதை மறுக்கமுடியாது. பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்சார் கற்கை நெறிகள் கைவிடப்பட்டதும் இத்தகைய நிலைமையையே எடு

உள்ளது. 1977 க்குப்பின் அத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது அதற்குச் சாதகமாகக் கூறப்பட்ட காரணங்களுள் அந் நெறிகள் உருவாக்கிய கற்றோர் தொகுதி பொருந்திக்கொள்ளக்கூடிய தொழிலுலகு நாட்டில் வளர்ச்சியடையவில்லை என்பதும் ஒன்றாகும்.

புதிய வழிகளைச் சிந்திக்கும்போது அவற்றை உரிய முறையில், முன்யோசனையுடன், திட்டமிட்டு/வேண்டிய ஆயத்தங்களைச் செய்து அமுலாக்கப்படாது, உடனடித் தீர்மானங்களாகத் திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தோல்விக்கு இட்டுச் செல்லும் முனைதொழிற் படிப்பு, தொழில்சார் கற்கைநெறிகளின் தோல்விக்கு இதுவும் ஒரு காரணியாகும். 1981 இல் கொண்டுவரப்பட்ட கொத்தணிப் பாடசாலை முறைமையும் இப்படியான ஒன்றேயாகும். பாடசாலை வளங்களின் உச்சப் பயன்பாட்டுக்கும் பங்கீட்டுக்கும் வழிவகுக்கவெனக் கருதப்பட்ட அவ்வமைப்பு, சிந்திக்கப்பட்டதுபோல முன்னோடிப் பரீட்சார்த்த அனுபவத்தினடிப்படையில் செயற்படுத்தப்படாமல் அமுலாக்கப்பட்டபோது தீர்த்துவைத்த பிரச்சினைகளிலும் பார்க்கக் கூடிய பிரச்சினைகளையே உருவாக்கியுள்ளது.

கல்வி வாய்ப்புக்களைப் பெருக்கும் எண்ணத்துடன் முன்மொழியப்பட்ட கருத்துக்கள், குறிப்பாக மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பானவை, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிறுவன அமைப்புக்கள் வளர்ச்சி பெறாமையால் குறித்த நிறை பயனைப்பெறும் சூழ்நிலையினை எய்தவில்லை. முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள்ளப்படுகின்றன என்றாலும் போதிய முன்னேற்றம் கிடைத்துள்ளதாகக் கூறமுடியாது.

கல்வியின் பிரதான பிரச்சினையாக இனங்காணப்பட்ட, கல்விக்கும் தொழில்வாய்ப்புக்கும் இடையிலான தொடர்புரீதியான இசைவின்மை இன்றும் அதே நிலையில்தான் காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டில் வெளியான இளைஞர் பிரச்சினைமீதான சனாதிபதி ஆணைக்குழு இந் நிலைமையினைக் கோடிட்டுக் காட்டுவதைக் காணலாம். இதைச் சீர்செய்யும்வகையில் அவ் ஆணைக்குழு எடுத்தியம்பிய விதப்புரைகள் சில அண்மைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்படலாம். எம்முடைய நாட்டின் பாரம்பரிய 'நோயான' தலைமைத்துவ மாற்றத்தைத் தொடர்ந்து கொள்கைப் புறக்கணிப்பு எதிர்காலத்தில் எப்படியான முடிவை ஏற்படுத்துமோ என்பது போகப்போகத்தான் தெரியும்.

இவ்விதமான, திடீர் முடிவுகள் உடனடித் தீர்மானங்கள் அடிப்படையிலான செயன்முறைகள் என்பன கல்விக்கு உகந்தனவல்ல என்பதை அரசு மேலிடத்தவர்களே உணர்ந்துள்ளனர் என்பதை அண்மைக்காலக் குறிப்புரைகள் எமக்குச் சுட்டுகின்றன. அவை இதயசுத்தியுடன் எழுபவையாயின் கடந்தகால அனுபவங்கள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அத்திவாரத்தில் புதிய கட்டமைப்பினைக் கட்டியெழுப்பலாம், அது நடக்குமேயானால் நாம் இதுவரை பார்த்த வரலாற்று நிகழ்வுகள், முடிவுகள் பயனற்றுப்போகத் தேவையில்லை.

***************************

## உசாத்துணை நூல்கள்


1. கல்வி அமைச்சு (இலங்கை), கல்வியின் புதிய பாதை, கொழும்பு, 1972.

2. கல்வி, உயர் கல்வி அமைச்சு (இலங்கை), புதிய யோசனைகள் திட்டங்கள் முன்னேற்றம், கொழும்பு.

3. Arumugam V, Language in Education in Multilingual Society - The Sri Lanka Experience, Inaugural Lecture 29.04.1992, University of Jaffna, 1992.

4. Govt. of Sri Lanka, Report of the Presidential Commission on Youth, S.P.I., 1990, Colombo, 1990.

5. I.L.O., Matching Employment Opportunities and Expectations in Ceylon, Report of an Inter Agency Team Organized by the I.L.O., 1971.

6. Jeyaweera, Swarna. Educational Policies and Change from the Mid.Twentieth Century to 1977, N.O.E., Colombo, 1988.

7. Marga Institute, University Education and Graduate Employment in Sri Lanka. UNESCO/Marga, Institute, Colombo 1983.


8. Ministry of Education (Sri Lanka), Education Proposals for Reform, Colombo, 1981.

9. Silva, W.A.de and Gunawardena, Chandra. Educational Policies and Change 1977-1986, N.I.E., Colombo, 1989.


££££££££££££££££

... JAFFNA
Library
SRI LANKA

ARCHIVES



''ஈழத்தின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்கள் மிகப் பழைய காலத்திலிருந்
இப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் மூதாதையர், சிங்கள மக்கள் ஈழத்
வந்து குடியேறிய காலப்பகுதியில் அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழகத்திலிரு
வந்து குடியேறியிருத்தல் வேண்டும். புவியியற் சார்பாக நோக்குமிடத்து தென்இந்தியாவு
அண்மையாகவுள்ள இலங்கைப் பகுதிகளில் மிகப் பழைய காலத்திலேயே தமிழ்மக்கள் பர
வாழ்ந்திருப்பார்கள் என்று எண்ண இடமுண்டு. அக்காலப் பகுதியில் ஈழத்தில் வந்து குடி
றிய தமிழ்மக்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மட்டுமல்லாது வடமத்திய பகுதி, வடமேற்
பகுதி முதலான பகுதிகளிலும் பரந்து வாழ்ந்தார்கள். பழைய காலத்தில் இப்பகுதிகள்
தமிழரது குடியிருப்புக்கள் இருந்தன என்ற உண்மையை வரலாறு, சமூகவியல், புவியியல் மு
லான துறைகளைச் சார்ந்த ஆய்வாளர்கள் ஆராய்ந்து நிறுவிவருகின்றனர். மத்திய கா
பகுதியிலிருந்து தமிழ் மக்கள் தொகை மிக அதிகமாகப் பெருகியதைத் தொடர்ந்து ஈழ
தமிழ்மக்கள் தனிப்பட்ட இராச்சியம் ஒன்றினை அமைத்துத் தமது சமூக காலசாரப் பண்
களை வளர்க்கலாயினர். இத்தகைய ஓர் அரசியற் சூழ்நிலையில் தமிழ்மக்களது குடியிருப்
கள் ஈழத்தின் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சார்ந்து மேலும் செறிவாக அமையலாயின.''